மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.10/2024
இ.ம.எண்.02/2019
அ.வ.எண்.66/2019

1. வரதராஜன் (எ) வரதராஜு
2. குமுதவள்ளி
3. சேதுவராயன்
4. தமிழ்செல்வன்
5. கோமதிசெல்வி ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. மாரியம்மாள்
2. ராமலிங்கம்
3. பெரியண்ணன்
4. அறிவழகன் ... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 08.03.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 4 ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினராகவும் இருந்து வந்த இம்மனுவில் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் விதி 28(2) மற்றும் பிரிவு 151 ன் கீழ் இ.ம.எண்.02/2019 ல் 25.03.2024 ம் தேதி நிர்ணயிக்கப்பட்ட வாய்தாவை முன்னெடுப்பு செய்ய அனுமதி கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்கள்/வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில்

இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாக்கல் செய்து, அசல் வழக்கிலும், இடைநிலை மனுவிலும் மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி 25.03.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கிராம நிர்வாக அலுவலரை மனுதாரர்கள் தரப்பு சாட்சிகளாக விசாரிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

(ii) இந்நிலையில் மனுதாரர்கள் தங்களது வீட்டை சீரமைப்பு செய்து வந்த நிலையில், கடந்த 26.02.2024ம் தேதியில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்திற்கு வந்து மனுதாரர்களுக்கு இடையூறு செய்யும்விதமாக மேற்படி பணிகளை தடுத்ததோடு, கைகளப்பிலும் ஈடுபட்டனர். எனவே எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளைக்கான உத்தரவு பெற வேண்டி 25.03.2024ம் தேதியிலுள்ள இ.ம.எண்.02/2019 மனுவை முன்கொணர்வு செய்து விசாரணை நடத்த வேண்டியது அவசியமாகும். எனவே இ.ம.எண்.02/2019ல் 25.03.2024 நிர்ணயிக்கப்பட்ட வாய்தாவை முன்னெடுப்பு செய்ய அனுமதி கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாவா சொத்தின் அமைப்பினை மாற்ற வேண்டி கடந்த 26.02.2024ம் தேதியன்று JCB இயந்திரம் கொண்டு தாவா சொத்தில் புதியதாக வீடு கட்டப்போவதாக "சுண்ணாம்பு கலவை" கொண்டு தாவா பூமியில் குறியீடு (Marking) செய்து மண் வெட்டி எடுக்கவும், தாவா சொத்திலுள்ள பனை மரங்களை வெட்டி அகற்றவும் முற்படவே 1ம் எதிர்மனுதாரரும், அவரது மகனான 2ம் எதிர்மனுதாரரும் மேற்படி மனுதாரர்களின் சட்டப்புறம்பான செயல் குறித்து நியாயமான முறையில் மனுதாரர்களை கேட்ட போது எதிர்மனுதாரர்களை மனுதாரர்கள் தாக்கியதால் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இந்நிலையில் பொய்யான சங்கதிகளை முன்னிறுத்தி எதிர்மனுதாரர்களையும், நீதிமன்றத்தையும் ஏமாற்றவே இம்மனு தாக்கல் செய்துள்ளனர்.

(ii) மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற வழக்குகளில் பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ள போது எந்த கட்டிடமோ, தாவா சொத்தின் அமைப்பை தரப்பினர்கள் மாற்றிடக்கூடாது, அது சட்டப்புறம்பான செயலாகும் என பல தீர்ப்பு வழிச் சட்டங்களில் அறுதியிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்கள் மனு பிரமாணப் பத்திரிக்கையில் இவ்வழக்கு வாய்தா தேதி 25.03.2024 என்றும் 28.03.2024 என்றும் மாற்றி மாற்றி குறிப்பிட்டுள்ளதும், 1ம் மனுதாரர் பெயர் அசல் வழக்குரையில் "Varatharajan @ Varatharaju" என்று உள்ளது. இம்மனுவின் நெடுந்தலைப்பு மற்றும் குறுந்தலைப்பில் "Varatharajan @ Varatharajan" என்று மாற்றி மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும் பொய்யான சங்கதிகளை முன்னிறுத்தியும், உண்மைகளை மறைத்தும் தாவா சொத்தின் அமைப்பை மாற்றி அமைத்திட மனுதாரர்கள் சட்டப்புறம்பாக முயற்சித்துவிட்டு, மேலும் உண்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாத மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப் படவில்லை. மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இடைநிலை மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி இரண்டிலும் மனுதாரர்கள் தரப்பு

ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி 25.03.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரர்கள் தங்களது வீட்டை சீரமைப்பு செய்து வந்த நிலையில், கடந்த 26.02.2024ம் தேதியில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்திற்கு வந்து மனுதாரர்களுக்கு இடையூறு செய்யும்விதமாக மேற்படி பணிகளை தடுத்ததோடு, கைகளப்பிலும் ஈடுபட்டனர் என்றும், எனவே எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளைக்கான உத்தரவு பெற வேண்டி 25.03.2024ம் தேதியிலுள்ள இ.ம.எண்.02/2019 மனுவை முன்கொணர்வு செய்து விசாரணை நடத்த வேண்டியது அவசியம் என்றும், எனவே இ.ம.எண்.02/2019ல் 25.03.2024 நிர்ணயிக்கப்பட்ட வாய்தாவை முன்னெடுப்பு செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு பிரமாணப் பத்திரிக்கையிலும், மனுவின் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பிலும், 1ம் மனுதாரரின் பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து தொடர்பாக பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ள போது தாவா சொத்தில் கட்டுமானங்கள் செய்ய மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், உண்மை சங்கதிகளை மறைத்து தாவா சொத்தின் அமைப்பை மாற்றிட வேண்டி பொய்யான காரணங்களை கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், ஆகவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் எதிர்வாதம் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்கையில், மனுதாரர்கள்/வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாக்கல் செய்து, அசல் வழக்கிலும், இடைநிலை மனுவிலும் மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி 25.03.2024ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மனு பிரமாணப் பத்திரிக்கையிலும், மனுவின் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பிலும், 1ம் மனுதாரரின் பெயர் தவறாக

குறிப்பிடப்பட்டுள்ளது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறியுள்ளததை கருத்தில் கொள்கையில், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கை மற்றும் மனுவில் 1ம் மனுதாரரின் பெயர் முதலில் "Varatharajan @ Varatharajan" என குறிப்பிடப்பட்டுள்ளதும், பின்னர் "Varatharajan @ Varatharaju" என திருத்தம் செய்யப்பட்டு சுருக்கொப்பம் செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. அதே சமயத்தில் திருத்தம் செய்யப்படாத மனு நகல் எதிர்மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரரின் பெயர் குறித்து எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படாத நிலையில், பெயரில் எழுத்துப்பிழை உள்ளதாலேயே மேற்படி எழுத்துப்பிழை வழக்கு நடவடிக்கைகளில் குந்தகத்தையும், எதிர்மனுதாரர்களின் நலனுக்கு பாதிப்படையும் ஏற்படுத்தும் என கூற இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேபோல் தாவா சொத்து குறித்து பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தில் மனுதாரர்கள் கட்டுமானங்கள் மேற்கொள்ள எவ்வித உரிமையும் இல்லை என எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறியுள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி சட்டநிலைப்பாடுகள் குறித்து அசல் வழக்கில் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கும், அதிலுள்ள இடைநிலை மனுவும் 25.03.2024ம் தேதியில் வாய்தா நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் இன்றைய தேதியிலோ அல்லது குறுகிய கால கட்டத்திற்குள் ஏதேனும் முந்தைய தேதிகளில் வழக்கை முன்னெடுப்பு செய்து வாய்தா நிர்ணயிக்கப்படுவதால் எதிர்தரப்பினர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட போவதில்லை என்பதாலும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்வது யாதெனில், கடந்த 19.04.2022ம் தேதியில் மேற்படி இடைநிலை மனுவை அசல் வழக்குடன் சேர்த்து நடத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இடைநிலை மனுவை மட்டும் முன்கொணர்வு செய்ய இயலாது என்பது தெளிவாகிறது.

(vi) அதேசமயத்தில், அசல் வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியமளிக்க ஆஜராவதற்காக 25.03.2024 ம் தேதியில் வாய்தா வைக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கு முன்கொணர்வு செய்யப்படுவதால், அசல் வழக்கு மீண்டும் வாய்தா வைக்கப்படும் தேதி குறித்த உரிய அறிவிப்பை மனுதாரர்கள் தரப்பில் சாட்சிக்கு தெரிவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கு முன்னெடுப்பு நாள்.13.03.2024 ஆக நிர்ணயிக்கப்படுகிறது. தரப்பினர்கள் ஆஜராக உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.03.11 17:47:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 26.02.2024 | புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீதுகள் | அலுவலகநகல் அசல் |
| எ.ம.சா.ஆ.2 | புகைப்படங்கள் (4) மற்றும் குறுந்தகடு | அசல் |

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.03.11 17:47:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.